முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2024 யூலை

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2024-08-10
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிறற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, கீழ்வரும் எண்ணக்கருக்களை **விபரிக்குக** :

(i) அறிக்கையிடல் உரிமம்.

(ii) பொருளாதார வளம். (03 புள்ளிகள்)

(b) பொது நோக்க நிதிக் கூற்றுக்களின் நோக்கத்தை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

ஒரு ஒருங்கிணைந்த அறிக்கை என்பது ஒரு நிறுவனத்தின் தந்திரோபாயம், ஆளுகை, செயலாற்றுகை மற்றும் அதன் வெளிப்புறச் சூழலின் சூழமைவிலுள்ள வாய்ப்புகள் எவ்வாறு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால மதிப்பை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றன என்பதைப் பற்றிய சுருக்கமான தொடர்பாடல் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒரு ஒருங்கிணைந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் மூன்று (03) வகையான மூலதனங்களை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் இரண்டு (02) நோக்கங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

2024 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி**யிடமிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப் பட்டுள்ளன:

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு: *(ரூபா'000)*

| **சொத்துக்கள்** | **கிரயம் (ரூபா)** | **2024 மார்ச் 31 இல் முன்கொணரற் பெறுமதி (கணக்கீட்டில் எழுதப்பட்ட பெறுமதி) (ரூபா)** | **வரி நோக்கத்தின்படி திரண்ட தேய்மானம் (மூலதன விடுதொகை) (ரூபா)** |
|---|---:|---:|---:|
| காணி | 8,000 | 8,000 | - |
| மோட்டார் வாகனங்கள் | 12,000 | 6,500 | 9,800 |

(2) 2023 ஏப்ரல் 01 இல் பிற்போடப்பட்ட வரிப் பரிப்பு ரூபா 650,000/-.

(3) ஆண்டிற்கு 30% இல் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** வருமான வரி செலுத்துவதுடன் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிவிதிக்கத்தக்க இலாபம் ரூபா 2,600,000/- ஆக இருந்தது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) 2024 மார்ச் 31 இல் பிற்போடப்பட்ட வரிச் சொத்து / பரிப்பு.

(b) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிச் செலவினங்கள். (05 புள்ளிகள்)

## வினா 04

2023 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனியின்** 75% பங்கு மூலதனத்தை ரூபா 125 மில்லியனுக்கு **வரையறுக்கப்பட்ட சிக்மா கம்பனி** கையகப்படுத்தியது. கையகப்படுத்தல் திகதியில் **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனியின்** நிகரச் சொத்துக்களினது புத்தகப் பெறுமதி கீழ்வருமாறு :

| | **ரூபா '000** |
|---|---:|
| குறிப்பிடு மூலதனம் | 100,000 |
| பொது ஒதுக்கம் | 24,000 |
| கைக்கொள் இலாபம் | 12,000 |
| | **136,000** |

கையகப்படுத்தல் திகதியில், மோட்டார் வாகனங்களின் சந்தைப் பெறுமதியில் காணப்பட்ட மதிப்புயர்வு காரணமாக **வரையறுக்கப்பட்ட பீற்றா கம்பனியின்** நிகரத் சொத்துக்களது சீர் மதிப்பானது நிகரச் சொத்துக்களின் புத்தக மதிப்பை விட 10% உயர்வானதாக இருந்தது. அத்திகதியில், கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர் மதிப்பு ரூபா 40 மில்லியனாக இருந்தது.

***நீங்கள் செய்யவேண்டியது :***

கையகப்படுத்தலினால் எழுகின்ற நன்மதிப்பைக் (goodwill) **கணிப்பிடுக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவ*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(a) 2023 சனவரி 01 இல், **வரையறுக்கப்பட்ட சண் சோலா கம்பனி** மன்னாரில் சூரியசக்தி மின்வலு ஆலையொன்றை நிருமாணிக்க ஆரம்பித்து, 2023 நவெம்பர் 30 இல் நிருமாணத்தைப் பூர்த்தி செய்தது. மின்வலு ஆலையின் கிரயத்தில் மூலதனமாக்கப்படக்கூடிய கடன்பெறுகைக் கிரயத்தை (borrowing costs) இனங்காண்பதற்கு முகாமை எதிர்பார்க்கிறது.

(1) மொத்த நிருமாணக் கிரயம் ரூபா 400 மில்லியனாகக் காணப்பட்டதுடன் சூரியசக்தி மின்வலு ஆலையின் நிருமாணிப்பாளருக்கு கீழ்வரும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன :

| விபரம் | கொடுப்பனவுத் திகதி | ரூபா ('000) |
|---|---|---|
| முதலாவது கட்டணப் பட்டியல் | 01.02.2023 | 50,000 |
| இரண்டாவது கட்டணப் பட்டியல் | 31.03.2023 | 100,000 |
| மூன்றாவது கட்டணப் பட்டியல் | 01.09.2023 | 140,000 |
| இறுதிக் கட்டணப் பட்டியல் | 30.11.2023 | 110,000 |
| | | **400,000** |

(2) **XYZ வங்கி**யிடமிருந்து கடனொன்று பெறப்பட்டதுடன் அது சூரிய மின்வலு ஆலையின் நிருமாணத்திற்காகவே முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. நிருமாணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட மீதித் தொகை **ABC வங்கியிடமிருந்து** பெறப்பட்ட கடனிலிருந்து பயன்படுத்தப்பட்டது. இந்த நிதி வசதிகளின் விபரங்கள் கீழ்வருமாறு :

| வங்கி | கடன் தொகை (ரூபா '000) | வருடாந்த வட்டி வீதம் | பெற்ற திகதி |
|---|---|---|---|
| **ABC வங்கி** | 550,000 | 12% | 30.04.2023 |
| **XYZ வங்கி** | 200,000 | 13% | 01.01.2023 |

(3) இரண்டு கடன்களினதும் மூலதன மீள்கொடுப்பனவுகள் 2024 சனவரி 01 இலிருந்து ஆரம்பித்தன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 23 – கடன்பெறுகைக் கிரயம் என்ற நியமத்தின்படி, 2023 டிசெம்பர் 31 இல் சூரியசக்தி மின்வலு ஆலையின் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்பெறுகைக் கிரயத்தைக் **கணிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(b) **லங்கா பீஎல்சீ** இன் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் ஆனால் நிதிக் கூற்றுக்கள் அதிகாரமளிக்கப்படுவதற்கு முன்னர், கீழ்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன :

(1) 2024 ஏப்ரல் 15 இல், நிறுவனம் தனது முக்கிய செயல்பாடுகளில் ஒன்றை நிறுத்துவதற்கான முறைசார் திட்டத்தை தெரிவிப்பதற்கான பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதுடன் கட்டடம் மற்றும் பிற உபகரணங்களைக் கழற்றுவதற்கான செலவு ரூபா 50 மில்லியனாக இருக்கும்.

(2) ஒவ்வொரு ஆண்டிலும் கம்பனி தனது ஊழியர்களுக்கு ரூபா 12 மில்லியன் வருடாந்த மிகையூதியம் (bonus) செலுத்துவது வழமையாகும். அதற்கிணங்க, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தில் கம்பனி அதன் ஊழியர்களுக்கு ரூபா 12 மில்லியன் வருடாந்த மிகையூதியத்தை வழங்குவதற்கு அதன் பணிப்பாளர் சபை 2024 ஏப்ரல் 20 இல் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

(3) 2024 மே 01 ஆவது வாரத்தில் ஏற்பட்ட சந்தை வீழ்ச்சி காரணமாக ஆண்டிறுதியில் செய்யப்பட்ட ரூபா 10 மில்லியன் கம்பனியின் முதலீடுகள் 2024 மே 10 இல், ரூபா 6 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(4) ஆண்டிற்கான இலாபத்தில் சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கொன்றுக்கு ரூபா 5/- என்றவாறு இறுதிப் பங்கிலாபமொன்றை வழங்குவதற்கு 2024 மே 15 இல் இடம்பெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2024 மே 20 இல் பணிப்பாளர் சபையால் அதிகாரமளிக்கப் பட்டுள்ளது எனக் கருதுக.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, **லங்கா பீஎல்சீ** இன் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்படும் என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) 2021 ஏப்ரல் 01 இல் ரூபா 6,500,000/- இற்கு மோட்டார் வாகனமொன்று கையகப்படுத்தப்பட்டது. அந்த மோட்டார் வாகனத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். மோட்டார் வாகனமானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகிறது. 2024 மார்ச் 31 இல், கம்பனி சேத இழப்புச் சோதனையொன்றை மேற்கொண்டதுடன் அதில் மோட்டார் வாகனத்தின் விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட சீர் மதிப்பு ரூபா 2,300,000/- எனவும் பயன்பாட்டிலுள்ள பெறுமதி (value in use) ரூபா 2,400,000/- எனவும் வெளிப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 36 – சொத்துக்களின் சேத இழப்பு என்ற நியமத்தின்படி, மோட்டார் வாகனத்தின் சேத இழப்பு நட்டத்தைக் (impairment loss) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) ***வரையறுக்கப்பட்ட சார்ட் கம்பனி*** காற்று பதனமாக்கிகளை (air conditioner) விற்பனை செய்வதிலும் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளது. 2023 ஏப்ரல் 01 இல், மாதாந்தம் ரூபா 15,000/- வாடகையில் பராமரிப்பு சேவையுடன்கூடிய காற்று பதனமாக்கி ஒன்றை வழங்குவதற்கு வாடிக்கையாளர் ஒருவருடன் 2 வருட ஒப்பந்தமொன்றை கம்பனி செய்து கொண்டுள்ளது.

இதனைத் தனியாக விற்பனை செய்தால், காற்றுப் பதனமாக்கி ஒன்றின் சந்தைப் பெறுமதி ரூபா 240,000/- ஆகவும் மாதாந்தப் பராமரிப்புச் சேவைக் கட்டணம் ரூபா 6,000/- ஆகவும் இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

SLFRS – வாடிக்கையாளருடனான ஒப்பந்தத்திலிருந்தான வருமானம் என்ற நியமத்தின்படி, மேற்படி ஊடுசெயல் மீதான 2024 மார்ச் 31 மற்றும் 2025 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்தை **அடையாளங் காண்க.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **வரையறுக்கப்பட்ட டொட்ஸ் (தனியார்) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட டொட்ஸ் (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2024 | 2023 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 150,126 | 136,420 |
| திரண்ட தேய்மானம் | (119,500) | (112,540) |
| **முன்கொணரற் பெறுமதி** | **30,626** | **23,880** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 125,786 | 118,970 |
| வியாபார மற்றும் பிற வருமதிகள் | 39,041 | 116,870 |
| காசும் காசுச் சமானங்களும் | 13,500 | 12,300 |
| | **178,327** | **248,140** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **208,953** | **272,020** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் (12,800,000 சாதாரண பங்குகள்) | 138,000 | 138,000 |
| கைக்கொள் இலாபம் | 7,262 | (12,800) |
| | **145,262** | **125,200** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 26,000 | 106,800 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடைக்கான ஏற்பாடு) | 16,300 | 15,900 |
| | **42,300** | **122,700** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 12,300 | 15,200 |
| குறுங்காலக் கடன்கள் | 5,400 | 5,000 |
| கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி | 1,450 | 1,600 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 2,241 | 2,320 |
| | **21,391** | **24,120** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **208,953** | **272,020** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரி மற்றும் வட்டிக்கு முன்னரான இலாபம் ரூபா 30,300,000/-.

(2) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூபா 290,000/-.

(3) 2024 சனவரி 31 இல் இடைக்காலப் பங்கிலாபம் செலுத்தப்பட்டது.

(4) 2023 செப்ரெம்பர் 30 இல் ரூபா 8.5 மில்லியனுக்கு மோட்டார் வாகனமொன்று விற்பனை செய்யப்பட்டது. மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூபா 5.2 மில்லியனாக இருந்த அதே வேளை 2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் 4.2 மில்லியனாக இருந்தது. மோட்டார் வாகனங்கள் 5 ஆண்டுகள் ஈறாக கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படுகின்றன. விற்பனை செய்யப்பட்ட வாகனத்திற்குப் பதிலாக ஒரு புதிய வாகனம் 2023 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதே திகதியில் மூலதனமாக்கப்பட்டது.

(5) ஆண்டின்போது ஒரு புதிய தொழிற்படு மூலதனக் கடன் ரூபா 5 மில்லியன் பெறப்பட்டதுடன் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான, கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூபா 8,075,000/-.

(6) ஆண்டின் காலப்பகுதியில் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 400,000/- ஆக இருந்ததுடன் ஆண்டின் காலப்பகுதயில் பணிக்கொடையாக எவ்வித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நேரில் முறையைப் பயன்படுத்தி 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட டொட்ஸ் (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுகள் கூற்றைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழுள்ள பரீட்சை மீதியானது 2024 மார்ச் 31 இலான **பிறின்டிங் சொலூசன்ஸ் பீஎல்சீ** இன் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**பிறின்டிங் சொலூசன்ஸ் பீஎல்சீ**
**2024 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (10,000,000 சாதாரண பங்குகள்) | | 125,000 |
| கைக்கொள் இலாபம் - 2023 ஏப்ரல் 01 இல் | | 30,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - 2023 ஏப்ரல் 01 இல் | | 8,000 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் / மீள்மதிப்பீட்டுத் தொகையில் :** | | |
| காணி – மீள்மதிப்பீட்டுத் தொகையில் (கிரயம் - ரூபா 17 மில்லியன்) | 25,000 | |
| கட்டடம் | 27,000 | |
| இயந்திரம் | 22,000 | |
| **2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் :** | | |
| கட்டடம் | | 15,000 |
| இயந்திரம் | | 8,800 |
| அகற்றல் கணக்கு | | 3,000 |
| மூலதன புத்துருவாகும் வேலை | 38,400 | |
| குத்தகைக் கொடுப்பனவு | 3,344 | |
| 2024 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 63,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 56,000 | 41,000 |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | 22,356 | |
| 2023 ஏப்ரல் 01 இலான வியாபார வருமதிகளுக்கான விடுதொகை | | 4,000 |
| விற்பனைக் கிரயம் / விற்பனைகள் | 124,000 | 255,000 |
| பிற வருமானம் | | 8,300 |
| 2023 ஏப்ரல் 01 இல் செலுத்த வேண்டிய வருமான வரி | | 4,300 |
| செலுத்திய வருமான வரி | 9,500 | |
| நிருவாகச் செலவினங்கள் | 51,600 | |
| விநியோகச் செலவினங்கள் | 35,100 | |
| நிதிச் செலவினங்கள் | 25,100 | |
| | **502,400** | **502,400** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) 2024 சனவரி 01 இல், கம்பனி அதன் அச்சுப் பதிப்பு இயந்திரங்களில் ஒன்றை ரூபா 5 மில்லியனுக்கு விற்பனை செய்தது. இந்த இயந்திரம் தொடர்பில், விற்பனைத் திகதியிலான கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் என்பன முறையே ரூபா 6 மில்லியன் மற்றும் ரூபா 1.8 மில்லியன் ஆகும். அதே திகதியில் கொள்வனவாளர் ரூபா 3 மில்லியனைச் செலுத்தியிருந்ததுடன் அது விற்பனைக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. மீதித்தொகையை கொள்வனவாளர் 2024 ஏப்ரலில் செலுத்தியிருந்தார். பெறப்பட்ட பணத்தொகையைப் பதிவு செய்ததைத் தவிர, கணக்கேடுகளில் வேறு எந்தப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

(2) 2023 ஏப்ரல் 01 இல், கம்பனியானது 100% நிதிக் குத்தகை அடிப்படையில் ரூபா 10 மில்லியன் கிரயத்தில் ஒரு புதிய அச்சுப்பதிப்பு இயந்திரத்தை கையகப்படுத்தியது. குத்தகைத் தவணைக் கட்டணங்கள், வருடாந்தம் ஆண்டின் இறுதியில் செலுத்தப்படுவதுடன் வருடாந்த குத்தகை வாடகை ரூபா 3,344,000/- ஆகும். குத்தகைக் காலம் 05 ஆண்டுகளாக இருப்பதுடன் உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 20% ஆகும். இயந்திரத்தின் உரிமையானது குத்தகைக் கால முடிவில் கம்பனிக்கு மாற்றப்படும். ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட குத்தகை வாடகையானது குத்தகைக் கொடுப்பனவுக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் வேறு எந்தக் கணக்கீட்டுப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

(3) கம்பனியின் கொள்கைப்படி, காணி ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்படுகிறது. அதற்கிணங்க, அது 2024 மார்ச் 31 இல் ரூபா 28,000,000/- ஆக மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இது கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

(4) கம்பனி, அதன் புதிய நிருவாகக் கட்டடத்தின் நிருமாணத்தைப் பூர்த்தி செய்துள்ளதுடன் அதனை 2024 சனவரி 01 இலிருந்து செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்துகிறது. இந்தக் கட்டடத்திற்காகச் செலவழிக்கப்பட்ட மொத்த நிருமாணக் கிரயம், மூலதன புத்துருவாகும் வேலைக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 05 ஆண்டுகள் |

(6) 2023 ஏப்ரல் 01 இலான வியாபார வருமதிகள் மீதிக்கான விடுதொகையானது **சகானா புத்தகக் கடையிலிருந்து** கிடைக்க வேண்டிய ரூபா 2,000,000/- விசேட ஏற்பாடொன்றை உள்ளடக்கியுள்ளது. தற்போது இந்தத் தொகை வசூலிக்க முடியாததாக உள்ளது எனவும் அறவிட முடியாக் கடனாக பதிவழிப்புச் செய்யப்பட வேண்டும் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 2024 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியின் 5% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணுவதற்கு முகாமையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(7) 2023 ஏப்ரல் 01 இல் அட்டுறுவான வருமான வரிப் பரிப்பு ரூபா 4,300,000/- என்பதுடன் வரிமதிப்பாண்டு 2023/24 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 5,600,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது. 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட வருமான வரிக் கொடுப்பனவுகள் “செலுத்திய வருமான வரிக்” கணக்கிற்கு தாக்கல் செய்யப்பட்டது.

(8) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக 2024 மே 31 இல் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவில், **பிறின்டிங் சொலூசன்ஸ் பீஎல்சீ** இற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (09 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(c) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (03 புள்ளிகள்)

(d) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மாற்றத்தைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **சண் பீஎல்சீ** இன் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள், 2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்கள் ஆகியவற்றின் பிரித்தெடுப்பு கீழே தரப்பட்டுள்ளது :

**சண் பீஎல்சீ**

**வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்பு** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | **2024** | **2023** |
|---|---|---|
| விற்பனை | 210,000 | 99,500 |
| விற்பனைக் கிரயம் | (125,500) | (66,100) |
| மொத்த இலாபம் | 84,500 | 33,400 |
| வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் | 71,600 | 19,500 |
| வட்டிச் செலவினம் | (11,200) | (8,700) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 60,400 | 10,800 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 42,150 | 8,100 |

**சண் பீஎல்சீ**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா'000)*

| **மார்ச் 31 இல்** | **2024** | **2023** |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் – முன்கொணரற் பெறுமதியில் | 155,000 | 140,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 65,000 | 35,000 |
| வியாபார வருமதிகள் | 35,000 | 26,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 41,000 | 15,400 |
| | 141,000 | 76,400 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **296,000** | **216,400** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 125,000 | 125,000 |
| கைக்கொள் இலாபம் | 74,750 | 45,100 |
| | **199,750** | **170,100** |
| **நீண்டகாலப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன் | 29,000 | 21,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 55,100 | 8,700 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 5,500 | 4,600 |
| அட்டுறுவான செலவினங்கள் | 6,650 | 12,000 |
| | 67,250 | 25,300 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **296,000** | **216,400** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களையும் கவனத்திற் கொள்க :

(1) 2022 மார்ச் 31 இலான வியாபார வருமதிகளும் தொக்குகளும் முறையே ரூபா 30,000,000/- உம் ரூபா 40,000,000/- உம் ஆகும்.

(2) சாதாரண பங்குகள் தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு :

| மார்ச் 31 இல் | 2024 | 2023 |
|---|---|---|
| வழங்கலிலுள்ள பங்குகளின் நிறையேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கை | 1,250,000 | 1,250,000 |
| பங்கொன்றின் சந்தைப் பெறுமதி | ரூபா 32/- | ரூபா 15/- |

(3) அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கொள்க.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) 2024 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த / ஆகிய திகதிகளிலான மேற்படி தகவல்களின் அடிப்படையில் **சண் பீஎல்சீ** இன் கீழ்வரும் விகிதங்களைக் **கணிப்பிடுக.**:

(i) மொத்த இலாப விகிதம்.

(ii) நிகர இலாப விகிதம்.

(iii) விரைவுச் சொத்து விகிதம்.

(iv) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்.

(v) தொக்கு இருப்புக் காலம்.

(vi) பங்கொன்றின் வருவாய். (10 புள்ளிகள்)

(b) மாறுபாடுகளுக்கான சாத்தியமான காரணங்களுடன் மேற்படி இரண்டு ஆண்டுகளையும் ஒப்பிட்டு மேற்படி விகிதங்கள் பற்றி **சண் பீஎல்சீ** இன் முகாமைக்கு பொழிப்பு அறிக்கை ஒன்றைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 10

**வரையறுக்கப்பட்ட ராமா கம்பனி** 2023 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட சீதா கம்பனியின்** 80% சாதாரண பங்கு மூலதனத்தை ரூபா 100 மில்லியனுக்கு கையகப்படுத்தியது. கையகப்படுத்தலினால் எழுகின்ற நன்மதிப்பு ரூபா 18 மில்லியனாக இருந்தது. 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ராமா கம்பனி** மற்றும் **வரையறுக்கப்பட்ட சீதா கம்பனி** ஆகியவற்றின் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள் கீழ்வருமாறு :

**2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | வரையறுக்கப்பட்ட ராமா கம்பனி | வரையறுக்கப்பட்ட சீதா கம்பனி |
|---|---|---|
| விற்பனை | 800,000 | 500,000 |
| விற்பனைக் கிரயம் | (465,000) | (225,000) |
| **மொத்த இலாபம்** | **335,000** | **275,000** |
| **பிற வருமானம் :** | | |
| முகாமைக் கட்டணம் மற்றும் வட்டி வருமானம் | 3,600 | 1,200 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண அகற்றல் மீதான இலாபம் | 9,500 | 1,900 |
| **செலவினங்கள் :** | | |
| விநியோகச் செலவினங்கள் | (64,000) | (134,000) |
| நிருவாகச் செலவினங்கள் | (114,000) | (98,000) |
| நிதிச் செலவினங்கள் | (12,000) | (21,000) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **158,100** | **25,100** |
| வருமான வரி | (41,000) | (5,100) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **117,100** | **20,000** |
| பிற முற்றடக்க வருமானம் | (1,400) | 3,200 |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | **115,700** | **23,200** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் காலப்பகுதியில், **வரையறுக்கப்பட்ட ராமா கம்பனி** ரூபா 120 மில்லியன் கிரயமான பொருள்களை, கிரயத்தில் 20% இலாபம் வைத்து **வரையறுக்கப்பட்ட சீதா கம்பனிக்கு** விற்பனை செய்திருந்தது. 2024 மார்ச் 31 இல், **வரையறுக்கப்பட்ட ராமா கம்பனியிடமிருந்து** கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 45 மில்லியன் பெறுமதியான தொக்குகள் விற்பனை செய்யப்படாது **வரையறுக்கப்பட்ட சீதா கம்பனியின்** களஞ்சியத்தில் எஞ்சியுள்ளன.

(2) முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக **வரையறுக்கப்பட்ட சீதா கம்பனியிடமிருந்து வரையறுக்கப்பட்ட ராமா கம்பனி** மாதாந்த முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 300,000/- இனை அறவிட்டுள்ளது.

(3) 2023 ஏப்ரல் 01 இல், **வரையறுக்கப்பட்ட சீதா கம்பனி வரையறுக்கப்பட்ட ராமா கம்பனிக்கு** இயந்திரமொன்றை ரூபா 8,000,000/- இற்கு விற்பனை செய்தது. அத்திகதியில், இந்த இயந்திரத்தின் முன்கொணரற் பெறுமதி ரூபா 7,200,000/- ஆகக் காணப்பட்டது. 2023 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் எஞ்சிய பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகக் காணப்பட்டது.

(4) **வரையறுக்கப்பட்ட ராமா கம்பனி, வரையறுக்கப்பட்ட சீதா கம்பனியிடமிருந்து** ரூபா 25 மில்லியன் குறுங்காலக் கடனொன்றைப் பெற்றுக்கொண்டது. கடன் மீதான ஆண்டிற்கான வட்டி ரூபா 1.2 மில்லியனாக இருந்ததுடன் அது **வரையறுக்கப்பட்ட ராமா கம்பனியால்** ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்டது.

(5) 2024 மார்ச் 31 இல் சேத இழப்புச் சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பு ரூபா 2 மில்லியனால் சேத இழப்பு அடைந்துள்ளது என்பது வெளிப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |